**கடுவன பிரதோச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து கடுவன பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) கடந்த ஆண்டு சபைக்கு ஒப்படைத்திருந்த ரூபா 6,313,558 தொகைக்கான தகன சாலை கட்டிடத்தின் பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) சபையின் மோடா கிரேடர் மற்றும் பெக்கோ இயந்திரத்தை பயன்படுத்தி மீளாய்வாண்டின் போது நிறைவேற்றபட்டிருந்த ரூப 1,877,827 தொகைக்கான அபிவிருத்தி வேலைகளின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான 2018 ஆண்டின் போது மேற்கொண்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 895,772 தொகையான செலவுகளுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 ஆண்டிற்கான தென்மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மற்றும் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் கிடைக்க வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 500,000 தொகைக்காக கடன்பட்டோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்கான கடை வாடகை வருமானம் ரூபா 415,594 தொகை குறைவாகவும், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை ஒரே தடவையில் செலுத்தும் பணம் ரூபா 145,000 மிகையாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) ஹெல்லல குப்பை முகாமைத்துவ நிலையம் நிர்மாணிக்கும் நிர்மாண வேலையின் தடுத்து வைத்தல் பணமாக கிடைக்க வேண்டிய ரூபா 267,107 தொகைக்கான கடன்பட்டோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக் கூற்றுகளிலுள்ள 02 கணக்கு விடயங்களில் மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய புத்தகங்கள் மீதிகளிடையே ரூபா 10,393,890 இற்கான சமமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2013 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 3,640,501 தொகையான நிர்மாண வேலை உதவி நிதி மற்றும் 2006 ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்படும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 565,242 தொகை வரை அதிகரித்திருந்தது. பெற வேண்டிய வீதி விளக்கு பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்ககுகள்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புகளின் மொத்தப் பெறுமதி ரூபா 17,477,684 தொகையாக இருந்ததுடன், அவற்றில் ரூபா 3,543,997 தொகை 2013, 2014 மற்றும் 2016 ஆண்டுகளின் போது நிறைவேற்றபட்ட நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய மீதிகளாகும்.

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 35,202,955 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்று செய்யவதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே காணப்படுகின்றன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடன் தொடர்பு | | பெறுமதி ரூபா. | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி கோவையின் விதி 185 | 13,665,436 | சபையின் 04 நடைமுறை கணக்குகளில் காணப்பட்ட மிகை மீதிகளை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 730,355 | 02 வருட காலத்தை விஞ்சியுள்ள 02 நிர்மாண வேலைகள் தொடர்பாக 10 சதவீத தடுத்து வைத்த பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

**1.3.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பாதீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை மிகைத்து மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2.437,162 இற்கான மூலதனச் செலவுகள் மற்றும் ரூபா 169,874 இற்கான மீண்டுவரும் செலவுகளை தீர்ப்பதற்காக 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி இலக்கம் 14(1) மற்றும் 14(2) இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 21,428,629 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,702,240 தொகை ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 56,400 | 1,044,512 | 1,046,722 | 1,830 | 40,500 | 1,761,091 | 1,759,891 | 4,090 |
| (ii) வாடகை | 14,502,590 | 11,626,932 | 12,615,922 | 1,558,194 | 11,534,000 | 14,633,757 | 14,916,665 | 2,547,184 |
| (iii) அனுமதிப்பத் திர கட்டணம் | 1,528,200 | 1,517,396 | 1,577,896 | 49,650 | 1,468,500 | 1,805,784 | 1,695,634 | 110,150 |
| (iv) ஏனைய வரு மானங்கள் | 16,144,800 | 28,989,608 | 20,042,419 | 32,753,972 | 18,354,000 | 22,206,529 | 19,909,198 | 12,133,008 |
| மொத்தம் | 32,231,990 | 43,178,448 | 35,283,009 | 34,363,646 | 31,397,000 | 40,407,161 | 38,281,388 | 14,794,432 |

**2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

-----------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 43,178,448 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 35,283,009 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு இறுதியில் ரூபா 14,794,432 ஆக காணப்பட்ட நிலுவை வருமானம் மீளாய்வாண்டு இறுதி அளவில் ரூபா 34,363,646 தொகை வரை வளர்ச்சியடைந்து இருந்தது.

**2.2.3 வீதவரி**

-------------

2004 ஜுன் 23 ஆம் திகதி 1346/9 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் முன்னேற்றமடைந்த கிராமப் பிரதேசங்கள் வெளியிடப்பட்டிருந்த போதிலும் அவ் ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 பிரிவிற்கு இணங்க வீதவரி விதிக்கப்பட்டு அறவீடு செய்வதற்காக கணக்காய்வுத் திகதியாகிய 2018 பெப்ரவரி 19 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.4 கடை வாடகை**

----------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 திசெம்பர் 27 திகதி தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 05 பந்தியின் பிரகாரம் கடைகளுக்கான உடன்படிக்கைகள் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் ஒரு முறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டும் எனினும், 03 கடைகள் தொடர்பாக அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2012 மற்றும் 2014 ஆண்டுகளின் போது வழங்கியிருந்த பெறுமதி மதிப்பீடு வாடகை, 02 வருடங்களுக்கு மாத்திரம் செல்லுபடியாகும் என குறிப்பிட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியாகிய 2018 பெப்ரவரி 19 திகதி வரை பெறுமதி மதிப்பீட்டுத் தொகை திருத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) கிரம வர்த்தக தொடர் கட்டிடத்தின் புதிய கடைகளை வாடகைக்கு வழங்குதல்**

--------------------------------------------------------------------------------------------------------------------

வடகையாளருடன் உடன்படிக்கைகள் மேற் கொள்ளபட்டு வர்தக தொடர் கட்டிடத்தின் கடைகள் 2017 மார்ச் 30 திகதி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கும் வரை மாதத்திற்கு ரூபா 3,500 வீத அறவீடு செய்வதற்கு நிதி மற்றும் கொள்கை குழு தீர்மானித்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்கூறிய 25 கடைகளையும் வாடகை கொடுக்கும் போது 2010 திசெம்பர் 27 ஆம் திகதி தபபா/பபாகொ/2010/01 இலக்க தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் கேள்வி நடைமுறை கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறிய (I) ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரே தடவையில் அல்லது கூடியது 6 மாதங்களுக்குள் ஒரே தடவை செலுத்தும் பணம் அறவிடப்பட வேண்டும் எனினும் அந்த ஏற்பாடுகளுக்கு இணக்கமின்றி ஒரே தடவை செலுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பமாகிய ஒரு வருட காலத்தை மிகைத்திருந்ததுடன் 2018 மே 31 திகதி அளவிலும் ரூபா 3,268,700 ஒரே தடவையில் செலுத்த வேண்டிய பணம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

(iii) கேள்வி நடைமுறைக்கு புறம்பாக வாடகைக்கு கொடுத்திருந்த இந்த கடைகளில் 12கடைகள் தொடர்பாக 2017 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 107,800 இற்கான வாடகை தொகையொன்று 01 மாதமும் 6 மாதம் வரை காலம் முதல் நிலுவையாக காணப்பட்ட போதும் அது தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் அல்லது 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மித்தெனிய சிறப்பு வர்த்தக தொகுதியின் கடை இலக்கம் 13 தொடர்பான நிலுவை வாடகை ரூபா 103,175 தொகையினை 2018 மே 31 திகதி அளவிலும் அறவீடு செய்திருக்காததுடன் ஒரே முறையில் செலுத்தும் தொகை என ரூபா 39,000 இற்கான தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது என அவதானிக்கபட்டுள்ளது.

(உ) சபைக்கு சொந்தமான ஏனைய கடைகளில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 294,864 இற்கான நிலுவை கடை வாடகை ரூபா 1,456,667 இற்கான நிலுவை ஒரே தடவையில் செலுத்தும் பணத்தை அறவீடு செய்வதற்காக உடன்படிக்கையின் பிரகாரம் அல்லது 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159(1) பிரிவின் பிரகாரம் நவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) மேலே (இ) (I) இல் குறிப்பிட்டுள்ள சுற்றறிக்கையின் 11 ஆம் பந்தி பிரகாரம் சபையின் அங்கீகாரம் இன்றி வேறு தரப்பினர் ஒருவருக்கு வாடகை உரிமையை ஒப்படைத்தல் எவ்வித்திலும் செய்ய கூடாது எனினும் சபையின் 14 கடைகள் ரூபா 6,000 மற்றும் 15,000 தொகை வரையான வீச்சில் காணப்படும் மாதாந்த வாடகைக்கு துணை வாடகை கொடுக்கப்பட்டிருந்தது என 2018 பெப்ரவரி 19 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

**2.2.5 சந்தை வாடகை**

மீளாய்வாண்டின் போது சபைக்கு சொந்தமான ஒன்பது வாராந்த சந்தைகளை கேள்வி நடைமுறை கடைபிடித்து வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.6 இயந்திர, உபகரணங்களின் மூலம் வருமானம்**

சபைக்கு சொந்தமான இயந்திர உபகரணங்களை வாடகைக்கு கொடுப்பது தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 929,419 தொகை நிலுவையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 2013 முதல் 2016 ஆண்டுவரையான காலம் தொடர்பாக அறவிட வேண்டிய தொகை ரூபா 825,585 தொகை காணப்பட்டது.

**2.2.7 நீர் கட்டண வருமானம்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 4,327,718 தொகைக்கான நிலுவை நீர் கட்டண வருமானத்தை அறவீடு செய்வதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

தென்மாகாண சபையிலிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிட 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 2,393,306 தொகை மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 26,032,948 தொகை பெற வேண்டிக் காணப்படுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் , பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதி மற்றும் நலனோம்பு என்பன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பாதீட்டின் மூலம் மூலதன வருமானங்கள் கிடைக்கும் தோற்றுவாய்கள் இனங்கண்டிருக்காததுடன், மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 1,000,000 இற்கான தொகை எந்த அபிவிருத்தி (மூலதன) நிகழ்ச்சி திட்டத்திற்கான பயன்படுத்தப்படும் சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் சபை நிதியத்தினால் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 2,015,000 தொகைக்கான அபிவிருத்தி திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம்

04 பாதைகள் நிர்மாணித்தல் மற்றும் திருத்த வேலைகளுக்கான மற்றும் மதகு ஒன்று அமைப்பதற்காக மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 650,000 தொகை கிடைத்திருந்த போதிலும், அந்த நிர்மாண வேலைகளை நிறைவேற்றுவதற்காக உடன்படிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2018 பெப்ரவரி 15 திகதி வரை, குப்பைகள் குவிக்கப்படும் வளவு மற்றும் சேதனப் பசளை உற்பத்தி செயற்திட்டத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெற்றிருக்கவில்லை.

(ii) ஒட்டு மொத்த அதிகாரப் பிரதேசம் அடங்கும் விதமாக குப்பை முகாமைத்துவ திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சேதனப் பசளை செயற்களத்திற்காக பொறுப்பாளர் ஒருவர் அல்லது காவலாளி ஒருவரை சேவையில் ஈடுபடுத்தியிருக்காததுடன் பிரதியீட்டு ஊழியர்கள் இருவர் இடையிடையே சேவையில் ஈடுபடுத்தி இருந்தனர்.

(iv) தண்ணீர் சேகரமாகும் விதத்தில் பல்வேறு பாத்திரங்கள் மற்றும் டயர்கள் முறைசார் விதமாக சேதனப் பசளை செயற் குவித்து காணப்பட்டதுடன் இவற்றின் மூலம் கொசுக்கள், நுளம்புகள் ஆகிய நோய் பரப்பும் கிருமிகள் பரவுதல் மற்றும் நோய் பரவும் விரிவாக்கல் நேரிடக்கூடும் என அவதானிக்கப்பட்டது.

(v) 2018 பெப்ரவரி 19 திகதி வரை, சேதனப் பசளை செயற்தளத்தில் பொலிதீன் தெரிவு செய்வதற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தை பயன்படுத்தி இருக்காததுடன் சேதனப் பசளை உற்பத்தி முறைப் பிரகாரம் நடைபெறாமையால் ஹலர் இயந்திர பயன்படுத்தாமல் காணப்பட்டது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகளின் ஊடாக அதிகார பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத் தரம் மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

**(அ) வீதி விளக்கு பராமரிப்பு**

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் 2010 ஆகஸ்ட 17 திகதி பீஈ/01/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பட்டிருந்த வீதி விளக்குகள், இலங்கை மின்சார சபையின் மூலம் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் சபை நிதியத்தில் இருந்து பராமரிக்கப்படும் 1018 வீதி விளக்குகளில் 217 தொகைக்கு மாத்திரம் கட்டணம் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது.

**(அ) சபைக்கு சொந்தமான கப் வண்டியின் உடம்பு பகுதியின் வர்ணத்தை மாற்றுதல்**

கப் வண்டியின் உடம்பு பகுதியின் வர்ணத்தை வெள்ளி நிறத்தில் இருந்து சிகப்பு வர்ணத்திற்கு மாற்றும் போது மோட்டார் வாகன சட்டத்தில் (அதிகாரம் 203) பிரிவு 10.2 இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 மனித வன முகாமைத்துவம்**

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதி உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 02 பதவிகளில் 02 பேரின் மிகையும் மற்றும் 12 பதவிகளில் 21 பேர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டது.

(ஆ) சபையில் கடமையாற்றும், அலுவலக பெண் உதவியாளர்களுக்கு வெளிக்கள வேலை தொழிலாளர் 8 பேருக்கும், நீர் தொழிலாளர் ஒருவருக்கும், சுகாதார தொழிலாளர் ஒருவருக்கும் மற்றும் நூலக உதவியாளர் இருவருக்கும் அந்த பதவிகளுக்கான கடமைகள் சாட்டப்படாமல் வேறு கடமைகள் சாட்டப்பட்டிருந்தது.

**3.4 செயற்பாட்டு திறமையின்மை**

மித்தெனிய கடைத் தொகுதி கட்டிடத்தின் இரண்டாவது மாடி மற்றும் முதலாவது மாடியின் இலக்கம் 21-25 வரையான கடைகள் என்பன வாடிவீடு ஒன்று நடாத்துவதற்காக வாடகைக்கு கொடுத்தல்

(அ) மேற்கூறிய ஆதனங்களை வாடகைக்கு கொடுப்பதற்கு 2017 அக்தோபர் 23 திகதி உடன்படிக்கை மேற்கொண்டிருந்ததுடன், வாடகை உடன்படிக்கையின் 2.1 பந்தியின் பிரகாரம் உடன்படிக்கை திகதி முதல் 04 மாத காலத்துக்குள் கட்டிடத்தை அபிவிருத்தி செய்வதற்கு வாடகையாளர் இணங்கியிருந்த போதிலும் 2018 மே 4 ஆம் திகதி வரை ஆதனத்தை நவீன மயப்படுத்தும் வேலை பூர்த்தி செய்திருக்காததுடன், வாடகையாளரினால் கால நீடிப்பு பெறுவதற்கும் விண்ணப்பித்திருக்கவில்லை.

(ஆ) வாடகை உடன்படிக்கையின் 2.2 மற்றும் 2.7 நிபந்தனைகளின் பிரகாரம் மாதாந்தம் சிட்டையிடப்பட்ட ரூபா 84,500 தொகையில் ரூபா 46,212 தொகை வீதம் முதலீடு செய்யும் தொகைக்கு பதிலீடு செய்வதற்கு இடமளித்திருந்ததுடன் 2017 அக்தோபர் 23

ஆம் திகதி முதல் திசெம்பர் 31 வரை தவணைப் பணம் ஏதும் செலுத்தியிருக்காமையால் ரூபா 94,444 இற்கான வாடகை மற்றும் தண்டப் பணம் நிலுவையாக காணப்பட்டது.

(இ) 2018 ஜுன் 13 திகதி வரையும் ரூபா 8,450,000 தொகைக்கான ஒரே முறையில் செலுத்தும் பணம் அறவீடு செய்திருக்காததுடன் ஒரே முறையில் செலுத்தும் பணம் மற்றும் நிலுவை வாடகை தொடர்பாக சபையினால் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

கடுவன பிரதேச சபையினால் பயன்படுத்தப்படும் ரூபா 2,447,025 கிரயத்தையுடைய 13 கட்டிடங்களின், ரூபா 245,750 கிரயத்தையுடைய 6 காணிகள் மற்றும் 03 வாகனங்கள் என்பவற்றின் சட்டரீதியான உரிமை சபைக்கு உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் 2018 பெப்ரவரி 19 திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

சபைக்கு சொந்தமான 8 வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் 01 வருடம் முதல் 06 வருடங்கள் வரையான காலம் முதல் செயற்படாது காணப்பட்டதுடன், நிரந்தரமான இயந்திர இயக்குனர்கள் மூவர் சபையின் கடமையில் இருக்கும் போது பெக்கோ இயந்திரம், மோட்டார் கிரேடர் மற்றும் தகர்க்கும் இரும்பு உருளை 02 மாதங்கள் முதல் 09 மாதங்கள் வரையான காலம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

**3.5.3 பண்டக் கணிப்பீட்டு விதப்புரைகள் செயற்படுத்தாமை**

பண்டங்கள் பற்றாக்குறைகள் மற்றும் வாகனங்கள் பழுதுபார்த்தல் தொடர்பாக 2016 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் மூலம் வழங்கியிருந்த விதப்புரை 2018 பெப்ரவரி 19 திகதி வரை செயற்படுத்தியிருக்கவில்லை.

**3.5.4 வாகனப் பயன்பாடு**

**(அ) வருமான அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதி சான்றிதழ் பெற்றுக் கொள்ளல்**

சபையினால் பயன்படுத்தப்படும் 05 வாகனங்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான வருமான அனுமதிப்பத்திர பெற்றிருக்காததுடன், கை டிரக்டர் ஒன்று மற்றும் மோட்டார் சைக்கில் ஒன்றிற்காக காப்புறுதிச் சான்றிதழ்கள் பெற்றிருக்கவில்லை.

**(ஆ) எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்தல்**

சபையின் 11 வாகனங்கள் தொடர்பாக 2016 திசெம்பர் 29 திகதி 30/2016 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்திருக்கவில்லை.

**3.6 பெறுகை**

**3.6.1 பெறுகைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்கான சபையினால் பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**3.6.2 ஒப்பந்த நிருவாகம்**

(அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கிராமப் புரங்களின் 1000 கி மீற்றர் பாதை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சி திட்டம் 2017 இன் கீழ் ரூபா 6,000,000 ஏற்பாடுகள் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் கீழ் அபிவிருத்தி திட்டங்களுக்காக அங்கீகாரத்தை பெற்று அமுல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2013 ஆண்டு தொடர்பான ரூபா 2,995,469 தொகைக்கான மகநெகும கிராம அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதைகள் குறிப்பிட்ட தரத்தை கொண்டவையாக காணப்பட்டமையால் அவ் ஏற்பாடுகள் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையே பின்வருமாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாதீட்டின் மூலம் 04 செலவு விடயங்கள் தொடர்பாக வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,132,000 தொகைக்கான ஏற்பாடுகள் வருட இறுதியில் உள்ளவாறு முற்றாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 02 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்கள் ரூபா 12,204,682 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 17 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை ஆக இருந்தது.

(இ) 03 செலவு விடயங்களில் பிரதிகூலமன முரண்கள் ரூபா 2,607,036 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 09 சதவீதம் முதல் 33 சதவீதம் வரை வீச்சில் இருந்தது.

(ஈ) நான்கு செலவு விடயங்கள் சேமிப்புகளின் கூட்டுத்தொகை ரூபா 10,585,212 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 10 சதவீதம் முதல் 21 வரையான வீச்சில் இருந்தது.

(உ) ஐந்து வருமான விடயங்களில் மதிப்பீட்டு வருமானத்தை மிகைத்து ரூபா 40,828,725 தொகை உழைத்திருந்ததுடன், அப்பெறுமதி 18 சதவிதம் முதல் 2700 வரையான வீச்சில் காணப்பட்டது.

**4.2 உள்ளக கணக்காய்வு**

2014 பெப்ரவரி 14 திகதி தபபா/யஹ/01/ந.ச.வே இலக்கம் கொண்ட தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச சபையின் உள்ளக கணக்காய்வு அலுவல்களுக்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

2009 ஜுன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்கம் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் காலாண்டிற்கு 01 ஆக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டிற்காக 03 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | முறைமையின் பிரதன குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | கணக்கு மீதிகளை கைவிடுதல் குறைவாகவும் மிகையாகவும் காட்டப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை. |
| | | (ii) | நிதிக் கூற்றுகளில் காட்டபட்டுள்ள பெறுமதி மற்றும் துணை பதிவேடுகளில் காட்டபட்டுள்ள பெறுமதிகளிடையே வித்தியாசம் காணப்பட்டது. |
| (ஆ) | வருமான நிருவாகம் | (i) | நிலுவை வருமான அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) | புதிய வருமானம் உருவாக்கும் வழிகளை இனங்கண்டிருக்கவில்லை. |
| (இ) | சொத்துக்கள் நிருவாகம் | (i) | காணிகள் கட்டிடங்கள் மற்றும் வாகனங்களின் உரிமை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| | | (ii) | வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பாதீட்டு கட்டுபாடு | (i) | பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவு விடயங்கள் இடையே கணிசமான முரண்கள் காணப்படல். |
| | | (ii) | பாதீட்டு இலக்குகள் பூர்த்தி செய்வதற்காக மதிப்பாய்வு மற்றும் தொடர்செயல் நடவடிக்கை எடுக்காமை. |